[திரு. எ.வ. வேலு] [2010 மே 14

4 கட்டமாக நாங்கள் எடுத்துக்கொண்டோம். எனவே, அதே அலுவலரை வைத்துத்தான் இந்தப் பணியையும் செய்யவேண்டிய சூழல் அரசுக்கு இருக்கிறது. ஆனாலும்கூட நாங்கள் நிறுத்தவில்லை. புதிய அட்டைகளையும் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். வேலூர் சம்பந்தமான பிரச்சினை ஏற்கெனவே என்னிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மாவட்ட, வட்ட வழங்கல் அலுவலகங்களிலே நான் சொல்லியிருக்கிறேன். இந்த மாதத்திலேயே கூடுமான வரையில் வேலூர் மாவட்டத்திலிருக்கின்ற அனைத்து அட்டைகளையும் வழங்குவதற்கு வேண்டிய முயற்சியை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அதே நேரத்திலே, நீக்கல் சான்று என்பது கட்டாயம் தரவேண்டும். ஏனென்று சொன்னால், ஏற்கெனவே ஒரு குடும்ப அட்டையிலே அந்தக் குடும்பத்தில் இருப்பவர்களெல்லாம் இருக்கிறார்கள். பிறகு ஒரு சிலர் திருமணம் செய்துகொண்டு வேறு குடும்பம் என்று ஆகின்றபொழுது, அட்டையிலே ஏற்கெனவே இருக்கும் பெயர்களை நீக்கி, நீக்கச் சான்றிதழ் கொடுத்தால்தான் புதிய அட்டைகளை வழங்க முடியும். ஆனால், அதே T.S.O., ஒரே அலுவலகமாக இருந்தாலும்கூட அந்தச் சான்றிதழை இணைத்தால்தான் புதிய அட்டை வழங்க முடியும். இப்படியெல்லாம் வழங்காத காரணத்தினால்தான் ஏற்கெனவே பல முறைகளில் பல இலட்சங்களாக போலி அட்டைகள் வந்தன. மீண்டும் duplicate ஆயிற்று. அதனால் அந்தச் சான்றைக் கட்டாயம் வைக்க வேண்டும். வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த மாதத்திலேயே முழு அட்டைகளையும் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கும்.

(ஏ) திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அணுமின் நிலையம், காவல்கிணறு விண்வெளி ஆராய்ச்சி நிலையம், நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலையைப் போன்று திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளத்தில் அணு மின் நிலையமும், அதேபோன்று காவல்கிணறு சந்திப்பிலே இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையமும் அமைந்துள்ளது. கூடங்குளத்திற்கு 10,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் ரூ.500/- முதல் ரூ.1,000/- வீதமும், அதேபோன்று,

2010 மே 14] [திரு. மு. அப்பாவு]

காவல்கிணறு சந்திப்பில் அமைந்திருக்கின்ற இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு சுமார் 2,000 ஏக்கர் நிலத்தையும் ஏழை விவசாயிகள் வழங்கியிருக்கின்றார்கள். காவல்கிணறு சந்திப்பில் இருக்கின்ற விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் இதுவரை நிலம் கொடுத்தவர்களில் ஒருவருக்குக்கூட பணி வழங்கப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் தற்போது தொழில் தொடங்க முன்வருபவர்களுக்கு, ஒரு ஏக்கருக்கு அதிகமாக நிலம் கொடுப்பவர்களுக்கு, அவர்கள் விரும்புகின்ற ஒரு நபருக்குப் பயிற்சி கொடுத்து, வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குகின்றார்கள். அதேபோன்று, வருங்காலத்தில் அதை மத்திய அரசு நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். அதேபோன்று, காவல்கிணறு சந்திப்பில் இருக்கின்ற விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் casual labourer ஆக, தற்காலிகப் பணியாளராகப் பணியாற்றியவர்கள் அனைவரையும் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று 1993 ஆம் ஆண்டு மத்திய அரசு ஆணையிட்ட பின்பும், இதுவரை நிரந்தரப்படுத்தப்படவில்லை. தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆசியினால் நான் மதிப்பீட்டுக் குழுத் தலைவராக அங்கு சென்றபொழுது, இந்தப் பிரச்சினையை. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்பாவு, விஷயத்தைச் சொல்லி, கவனத்தை ஈர்த்துவிட்டு உட்காருங்கள். விளக்கத்தையெல்லாம் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள்.

திரு. மு. அப்பாவு: அதேபோன்று, இப்போது 26 பேர்கள், அதிலே casual labourer ஆக இருக்கின்றவர்கள் பணி கிடைக்காமல், அவர்கள் மத்தியத் தீர்ப்பாணையத்திற்குச் சென்று அனுமதி பெற்றிருக்கின்றார்கள். 6 மாத காலத்திற்குள் அவர்கள் பணியமர்த்தப்படவேண்டுமென்று சொன்ன பிறகும், இதுவரை அவர்கள் பணியமர்த்தப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் சேலம் உருக்காலைக்கு நிலம் கொடுத்தவர்களுக்குச் செய்ததுபோன்றே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தனியாக ஒரு பதிவு முறையை. . .

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த அமைச்சர் பதில் சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சரி.